# BSNL ஊழியர் சங்கம்

# தமிழ் மாநிலம்

சுற்றறிக்கை எண்:-23 தேதி:17.07.2010.

## BSNLஐ பாதுகாக்க உறுதி காட்டிய வலுவான சென்னை கருத்தரங்கம்.

மத்திய அரசாங்கத்தின் தவறான கொள்கைகள் காரணமாகவும், BSNL நிர்வாகத்தின் அக்கறையற்ற தன்மையாலும் நலிவடைந்து வரும் BSNLஐ காத்திட வேண்டும் என்ற உன்னதமான நோக்கத்துடன் BSNLஇல் உள்ள அனைத்து அதிகாரிகள் மற்றும் ஊழியர் சங்கங்களும் ஒன்றிணைந்து கூட்டு நடவடிக்கைக் குழுவை உருவாக்கி பலகட்ட போராட்டங்களை நடத்தி வருகின்றதை அனைவரும் அறிவீர்கள். அதன் ஒரு பகுதியாக ஜூலை 19ஆம் தேதி புது டெல்லியில் ஒரு தேசீயக் கருத்தரங்கம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கு முன்னர் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் மண்டல கருத்தரங்கங்கள் நடத்த வேண்டும் என கூட்டு நடவடிக்கைக் குழு முடிவு செய்தது. அதன் அடிப்படையில் சென்னை தொலைபேசி மற்றும் தமிழ் மாநில கூட்டு நடவடிக்கைக் குழுக்கள் இணைந்து சென்னையில் ஜூலை 9 அன்று ஒரு கருத்தரங்கத்தை நடத்திட முடிவு செய்தது.

மிகக் குறுகிய காலத்தில் திட்டமிடப்பட்ட அந்த கருத்தரங்கம் சென்னை ராஜா அண்ணாமலை மன்றத்தில் மதியம் 3 மணியளவில் துவங்கியது. குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்திருந்தாலும் தமிழகம் மற்றும் சென்னயில் உள்ள அனைத்து பகுதிகளிலிருந்தும் 1500க்கும் மேற்பட்ட தோழர்கள் உணர்வு பூர்வமாக பங்கேற்றனர். தோழர்கள் K.கோவிந்த ராஜன்(BSNLEU), R.பட்டாபி (NFTE), S.லிங்கமூர்த்தி(FNTO), M. மாறன் (TEPU), A.சண்முக சுந்தர் ராஜன் (SNEA), N.வீரபாண்டியன்(AIBSNLEA), A. செல்லபாண்டியன்(TEPU) ஆகியோர் தலைமை தாங்கினர். BSNLEU தமிழ் மாநில செயலர் தோழர். S. செல்லப்பா அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

TEPU பொது செயலர் தோழர்.V. சுப்புராமன், SNEA பொதுச் செயலர் தோழர் GL. ஜோகி, NFTE துணைப் பொது செயலர் தோழர் CK மதிவாணன், BSNLEU பொது செயலர் தோழர் P. அபிமன்யூ, FNTO பொது ச்செயலர் தோழர் K. வள்ளி நாயகம், AIBSNLEA பொது செயலர் தோழர் பிரகலாத் ராய், AIBCTES துணைப் பொது செயலர் தோழர் J. பிரசாத், PEWA மாநில செயலர் தோழர் K.ஆறுமுகம், ATM மாநில செயலர் தோழர் C.அன்புராஜ், BSNLWRU மாநில துணைத் தலைவர் தோழர் G. நாகராஜன் உள்ளிட்ட தலைவர்கள் உரையாற்றினர்.

உரையாற்றிய தலைவர்கள் அனைவரும் மத்திய அரசாங்கத்தின் தவறான கொள்கைகளையும், BSNL நிர்வாகத்தின் உறுதியற்ற தன்மையினையும் எடுத்துரைத்ததுடன் ஊழியர்கள் செய்ய வேண்டிய பணிகளை எடுத்து உரைத்தனர். பொது மக்கள் மத்தியில் பலமான பிரச்சாரத்தை கொண்டு செல்ல வேண்டும் என்றும் ஜூலை 19 டெல்லி கருத்தரங்கத்தின் முடிவுகளை உறுதியுடன் நிறைவேற்ற வேண்டும் எனவும் எடுத்துரைத்தனர். BSNL நிறுவனம் உறுதியாக இருந்தால் மட்டுமே பொதுமக்களுக்கு தரமான தொலைத்தொடர்பு சேவைகள் குறைந்த விலையில் கிடைக்கும் என்ற உண்மையை பொது மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும் எனவும் இல்லையெனில் தனியார் நிறுவனங்கள் தங்களுக்குள் கூட்டணி அமைத்து விலையேற்றி பொதுமக்களை சுரண்டி அடித்து விடுவார்கள் என்பதையும் விளக்கமாக சொல்ல வேண்டும் என்று எடுத்துரைத்தனர்.

மத்திய தொழிற்சங்க தலைவர்கள் தோழர். அ. சவுந்தர் ராஜன்(CITU), தா. பாண்டியன்(AITUC), K. இளவரி(INTUC) மற்றும் செ. குப்புசாமி(LPF) ஆகியோர் சிறப்புரையாற்றினர். அரசியல் வேறுபாடுகளை களைந்து இந்திய நாட்டின் மிகச் சிறப்பான பொதுத்துறையான BSNLஐ பாதுகாக்க அவர்களும் தங்கள் ஆதரவினை கொடுத்துள்ளனர்.

இறுதியில், BSNLEU தமிழ் மாநில செயலர் தோழர்.S. செல்லப்பா, சென்னை தொலைபேசி NFTE மாநில செயலர் தோழர் CK மதிவாணன் ஆகியோர் முன்மொழிந்து NFTE தமிழ் மாநில செயலர் தோழர் R. பட்டாபி மற்றும் BSNLEU சென்னை தொலைபேசி மாநில செயலர் தோழர்.K. கொவிந்த ராஜன் வழிமொழிந்த தீர்மானம் கலந்து கொண்ட சார்பாளர்களின் பலத்த கரவொழிக்கிடையே ஏகமனதாக நிறைவேற்றது.

BSNLஐ அழித்திட யார் நினைத்தாலும், ஊழியர்களும் அதிகாரிகளும் ஒன்றிணைந்து பொதுமக்களின் ஆதரவுடன் BSNLஐ காத்திடுவார்கள் எனும் நம்பிக்கையை உருவாக்கிய கருத்தரங்கத்தை SNEA சங்கத்தின் தமிழ் மாநில செயலர் தோழர். R. அசோகன் நன்றி உரையாற்றி முடித்து வைத்தார்.

வாழ்த்துக்களுடன்,

**தோழமையுள்ள,**

**S. செல்லப்பா.**
**மாநில செயலர்.**